# எடையபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திரு K R.பழனிச்சாமி அவர்கள்

**க.எண் :** *05/2024* **நாள்** *15.03.2024*

**பொருள் :** குடியிருப்பு மனைபிரிவு திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம் எடையபாளையம் ஊராட்சி எடையபாளையம் ரீ.ச. எண் 144/2B ல் பு.ஏ *2* ஏக்கர் *(அ)8100.00* ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவு வரைபட ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக

**பார்வை :**

1. அரசானைஎண் *71,*ஊரக வளர்ச்சி துறை நாள் *16.06.203*
2. அரசாணை எண் *79* வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நவ *4(3)*நாள் *04.05.2017*
3. அரசானைஎண் *18,*நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி *(1)*துறை நாள் *04.02.2019*
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்*13753/2018/*எல்.ஏ *.2.*நாள் *16.08.2018*
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் *13686/2017* எல் .ஏ.*2* நாள் *28.09.2017*
6. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் *(*பொ*)* திருப்பூர் மண்டலம் அவர்களின் அலுவலக ROCNo.4ET9M4HX/2023/TCP DATE 31.08.2023

7. எடையபாளையம் ஊராட்சி
தீர்மானம் எண் *14/2024* நாள் *01.03.2024*

8. எடையபாளையம் ஊராட்சி
தீர்மானம் எண் *18/2024* நாள் *15.03.2024*

<u>உத்திரவு</u>

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம் எடையபாளையம் ஊராட்சி ரீ.ச.எண் 144/2B ல் பு.ஏ *2* ஏக்கர் *(அ)8100.00* ச.மீ பரப்பளவில் உள்ள பூமியில் *43* வீட்டு மனைகள் என பிரிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது இடத்தையும் சாலைகளையும் தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற மனைபிரிவு நிபந்தனை எண்*(3)*ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து குடியிருப்பு மனைபிரிவு அமைத்துக்கொள்ள பார்வை *(8)* காணும் எடையபாளையம் ஊராட்சி தீர்மானத்தின்படியும் மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு 1. திரு SR.கொளந்தசாமி த/பெ ராமசாமிகவுண்டர் தலையம்பாளையம் 2. திரு P.முத்தமிழ்செல்வன் த/பெ பொன்னுசாமி பட்டக்காரன்பாளையம் 3. திருமதி அனிதா க/பெ குமரன் பெருமுகைபுதூர் என்பவர்களுக்கு வரைபட அனுமதி வழங்கப்படுகிறது

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர் மண்டலம் அவர்களின் மனைபிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது
2. நாளது தேதியிலிருந்து *7* தினங்களுக்குள் வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை

மனுதாரர் தலைவர் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து சார்பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்

3. எந்த காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அந்த காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது
4. மனைபிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்
5. மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியின் கட்டிட அனுமதி பெற வேண்டும்
6. மத்திய மாநில அரசின் இதரத்துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைபிரிவு அமைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது
7. மேலே கண்ட நிபந்தனைகளை ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலே அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் இருந்து மாறுபட்டு மனைபிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவர் ஆவார்
8. மனைபிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் ,மனைபிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் /எவ்வித விடுதலுமின்றி மனைபிரிவு நுழைவாயிலில் 6×4 என்ற அளவில் நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்படவேண்டும்

9. வரைபடம் அங்கீகாரம் 1994 வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊர்கள் மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்
10. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்ப்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீரிக்கப்படுகிறது
11. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்

பெறுதல்

1.திரு SR.கொளந்தசாமி த/பெ ராமசாமி கவுண்டர் தலையம்பாளையம்

2. திரு P.முத்தமிழ்செல்வன் த/பெ பொன்னுசாமி பட்டக்காரன்பாளையம்

3.திருமதி அனிதா க/பெ குமரன் பெருமுகைபுதூர்

நகல்

1. நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் ,திருப்பூர் மண்டலம் , குமரன் வணிகவளாகம் ,திருப்பூர்.
2. சார்பதிவாளர் ,சார்பதிவாளர் அலுவலகம் ,குன்னத்தூர், ஊத்துக்குளி, திருப்பூர்
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ,ஊத்துக்குளி

K.R.Pd 15/3/24.

தலைவர்
எடையபாளையம்
ஊராட்சி